1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதுரை திருமலை நாயக்கர் மஹாலில் வழக்கறிஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதுவரை எந்த ஆபத்தும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. ஆனாலும் புதிதாக அமைக்கப்படுகிற கட்டடங்கள் விரைவாக அமைக்கப் பட்டு, அங்கு இவ்வலுவலகங்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பழந்தமிழர் நாகரிகத்திற்கும், கலைக்கும், பண்பாட்டிற்கும், கட்டடக் கலைக்கும் சான்றாகவும், இன்றைய பொறி இயல் துறைக்குச் சவாலாகவும் விளங்குகின்ற திருமலை நாயக்கர் மஹாலை மேலும் அழகுபடுத்தி, பழந்தமிழர் சிறப்பினை விளக்கும் தொல் பொருள் அடங்கிய மியூசியம் ஒன்றையும், பாலர் அரங்கம் ஒன்றையும் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பழந்தமிழர் நாகரீகம், கலை, பண்பாடு இவைகளின் மேல் கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆர்வத்தை மனமாரப் பாராட்டு கிறேன்.

சென்னை மாநகராட்சி

*** 214 வின.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி பொது மக்களிடமிருந்து ஒரு கோடி ரூபாய் கடன் திரட்ட முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், என்னென்ன பணிகளுக்காகக் கடன் திரட்டப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) என்னென்ன பணிகளுக்காக இந்தக் கடன் பணத்தை உபயோகப்படுத்துவது என்பதைப்பற்றி இன்னும் முடிவு செய்யப் படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தக் கடன் பொது மக்களிட மிருந்து 6¾ சதவீதம் வட்டிக்கு வாங்கப்பட்டது. எந்தப் பணிக்கு செலவழிக்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்படாததால் இந்தப் பணம் வங்கியில் 4½ சதவீதம் வட்டிக்குப் போடப் பட்டிருக்கிறது. அதனால் வருஷம் ஒன்றுக்கு ரூ. 6 லட்சம் வட்டிக்காக கொடுக்க வேண்டியிருக்கிறது. எந்தத் திட்டத்தையும் பரிசீலனை செய்து முடிவு செய்யாமல் கடனை எழுப்பி காலதாமதம் ஆவதற்குப் பதிலாக, திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவு செய்ததற்குப் பின்னால் கடன் தொகையை வசூல் செய்வதற்கு இனியாகிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? ந. ப. 12-00

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: எத்தனை சதவீத வட்டிக்குக் கடன் வாங்கப்பட்டது, எத்தனை சதவீத வட்டிக்கு வங்கியில் பணம் போடப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிய விவரம் இங்கே இல்லை. ஆனால் மாநகராட்சி மன்றம் சில குறிப்பிட்ட காரியங்களுக்காக இந்தப் பணத்தை செலவழிக்க தங்களுக்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம் நீர் வழங்கும் திட்டம், கழிவு நீர்த் திட்டம் ஆகியவைகளுக்கு இதனைப் பயன் படுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறியது என்றாலும் மாநகராட்சி மன்றம் தாங்கள் எற்கனவே சொன்ன பல வருவாய்த்துறை இனங்களுக்காக அதைச் செலவு செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இதைப்பற்றிப் பின்னாலே முடிவு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி, கடனை வசூலிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியது. இதன்படி கடன் வசூலிக்கப் பட்டு சென்னை ரிசர்வ் வங்கியில் பணம் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக குழு ஒன்று இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழு இதனைப் பரிசீலனை செய்யும்பொழுது அதனுடைய பல்வேறு அம்சங்களையும் ஒன்றாக ஆராயும். இந்தக் குழுவின் அறிக்கை வந்தவுடன் கடன் தொகை எந்தக் காரியங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைப்பற்றி நிர்ணயிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : எந்தப் பணிகளுக்காக இந்தக் கடன் தொகை செலவழிக்கப்பட வேண்டும் என்பது பற்றி மாநகராட்சி மன்றம் கருத்துத் தெரிவித்திருக்கிறது. அமைச்சர் அவர்களும் அதைப்பற்றிக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இப்பொழுதே 6 மாதம் ஆகிவிட்டது. அனாவசியமாகக் காலதாமதம் ஆகாமல் மறுபடியும் எப்பொழுது இதைப்பற்றி முடிவு செய்யப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பணம் வங்கியில் இருக்கிறது. வட்டி கிடைத்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற குழுவினுடைய அறிக்கை கிடைப்பதற்கு காலவரை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை விரைவிலே கிடைக்கும். கிடைத்த பிறகு அதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

* 215 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government proposes to set up a high power committee to suggest ways and means for augmenting the resources of Madras City Corporation; and

(b) if so, how soon?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) : சென்னை மாநகராட்சியின் வழிவகை நிலைமை குறித்த விவரங்களை ஆய்வு செய்வதற்காக அதிகாரிகள் அடங்கிய உயர்நிலைக் குழு ஒன்றை 15—7—1969 அன்று அரசு நியமித்துள்ளது.